# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 869/F/2025 & SA 5219/F/2024**

திரு.A.கருணாகரன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
துணை பதிவாளர்,
துணை பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம்,
செங்கல்பட்டு-603001. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.A.கருணாகரன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.பா.அருண்மொழிதமிழ், கூட்டுறவு சார்பதிவாளர் / பணியாளர் அலுவலர், செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 09/09/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தான் கூட்டுறவு சங்கங்கள் (வீட்டுவசதி) அலுவலகத்தில் ரூபாய் 2,00,000 (இரண்டு லட்சம்) கடன் பெற்று அதில் ரூபாய்.1,40,000 செலுத்தியுள்ளேன். மீதம் தொகை ரூபாய்.60,000 நிலுவையில் இருந்த நிலையில் மேலும் 10 ஆண்டு காலத்திற்குள் தவணை செலுத்த காலம் நிர்ணயம் செய்த நிலையில் கூடுதலாக கொரோனாக்காலம் என்பதால் மூன்று ஆண்டு காலம் கடன் செலுத்த கால தாமதம் ஆன நிலையில் தாங்கள் ரூபாய்.7,67,050 செலுத்த

பார்வையில் கண்ட அழைப்பானை கடிதம் அனுப்பப்பட்டது. ரூபாய் 60,000 நிலுவை தொகை இருந்த நிலையில் தற்போது பார்வையில் கண்ட கடிதத்தில் ரூபாய்.7,67,050 தொகையை எந்த காலகட்டத்தில் எவ்வளவு அசல், எவ்வளவு வட்டி, எவ்வளவு அபராத வட்டி, மற்றும் இதர இன செலவுத்தொகை பண வசூலிப்பு தொடர்பான ரிசர்வ் வங்கி எவ்வாறு வட்டி மற்றும் அபராத தொகை வசூலிக்க வேண்டும் என்று விதி வகுக்கப்பட்டுள்ளது. அந்த விதிகளுக்கு உட்பட்டு தங்கள் அலுவலக கடன் வசூலிப்பு மற்றும் வட்டி தொடர்பான தணிக்கை செய்த தணிக்கையாளரின் ஆய்வு அறிக்கையின் சான்றிட்ட ஒளி நகல் வழங்குவது என்பன போன்ற 5 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 09.10.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 12.10.2023 மற்றும் 17.10.2023 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 08.11.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 19.04.2024 மற்றும் 27.01.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 08.11.2024 & 10.12.2025 தேதியிட்ட கடிதங்கள் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இன்றைய விசாரணையில் மனுதாரர் சரியான தகவலை பெற்றுத்தருமாறு கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய தகவல்கள் மனுதாரருக்கு 08.11.2024 நாளிட்ட கடிதம் மற்றும் இணைப்புகளில் பேரேட்டின் நகல் மற்றும் உரிய விளக்கங்கள் இருப்பதை உறுதி செய்து மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனக்கருதி இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 869/F/2024 & SA 5219/F/2024**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுதகவல் அலுவலர்/
துணை பதிவாளர்,
துணை பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம்,
செங்கல்பட்டு-603001.

**மேல்முறையீட்டாளர்:-**

திரு.A.கருணாகரன்,
எண்.13, 14 நாடார் சங்க தெரு,
ரங்கநாதன் நகர்,
கடம்பத்தூர்,
திருவள்ளூர்-631203.

Copy to file: KR/PA